முருகப்பெருமான் துணை

**மகான் மிருகண்டரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.04.2024**, வெள்ளிக்கிழமை

1. கந்தனாக கருணை வடிவாக
   கலியினில் ஞான அவதாரம்
   இந்த மண்ணுலகம் நன்மைபெற
   இனிதே புரிந்த அரங்க ஞானியே
2. ஞானியே உன் அவதாரம் போற்றி
   ஞாலமதில் சோபகிருது சேல் திங்கள்
   இனிமைபட மூவேழீர் திகதி புகர்வாரம்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 23 ம் நாள், 05.04.2024, வெள்ளிக்கிழமை)
   இயம்பிடுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை மிருகண்டரிஷி யானும்
   அகிலமே பாதுகாப்புற உரைப்பேன்
   வாசி வென்ற ஞானவான்களாக
   வையகம் தன்னில் மக்களை தேற்றிட
4. தேற்றிட அரங்கன் வகுத்த
   தெய்வ நெறியே சன்மார்க்கம்
   ஆற்றல் கூடிட அன்னதானமும்
   அரங்கன் சேர்த்த உயர்நெறி ஆகும்
5. ஆகவே மாற்றமே இல்லையென
   அகிலத்தில் கலங்கி நிற்கின்ற
   யுகம் வாழ் மக்களே கேளும்
   உடன் ஞானிகள் வாழுகின்ற
6. வாழுகின்ற அரங்கன் குடிலுக்கு
   வருகை புரிந்து அரங்கனின்
   காலம் வெல்லும் நெறிகளை
   கட்டளையாக ஏற்று நடக்க
7. நடக்கவே நடைமுறை மாறும்
   நட்டங்கள் விலகி லாபமாக
   இடரின்றி வாழ்க்கை முறை
   இன்பமாக தேவைக்கு மேலான

8. மேலான மாற்றங்கள் காணும்
மேன்மைதரும் ஜீவ தயவை
காலமதில் உணர்ந்து தெளியவே
கருணை வடிவாக முருகப் பெருமான்
9. பெருமான் அரங்கன் வடிவில்
புவியில் இருக்கும் சூட்சுமமும்
தருமவழி விளங்கி இனிதே
தரிசிக்கும் வாய்ப்பும் கூடி
10. கூடியே தன் பிறவிப் பயன்
குறைவிலா அறிந்துணர்ந்து
நாடியே குருவருள் திளைக்க
ஞானிகளாக மாற்றம் கண்டு
11. கண்டுமே தன்வழி உலகோரை
கனிவுடன் மாற்றித் தேற்றி
தொண்டர்களாகத் தெய்வநெறி
தேறிட உலகையே மாற்றுவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–